**THE LABOUR COURT, SALEM**
**I.D.No. 47 of 2019**

<u>16.09.2025</u>

**PW1 –திரு. T. மணிகண்டன்**
**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (1ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் எலெக்ட்ரீசியனாக வேலை செய்கிறேன் என்றால் சரிதான். நான் Diploma in ECE பட்டயப்படிப்பு படித்துள்ளேன். நான் வெண்ணந்தூர் பேரூராட்சிக்கு உட்பட்ட இடத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். 22.07.2014 அன்று பேரூராட்சிக்கு மின்பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தம் கோரப்பட்டிருந்தது என்றால் தெரியாது. இது சம்பந்தமாக ஒப்பந்தத்தில் கலந்து கொள்ள மனு கொடுத்தேனா என்றால் இல்லை. ஒப்பந்தத்தில் கலந்து கொள்வதற்காக நான் கொடுத்ததாக சொல்லும் என்னிடம் தற்போது காட்டப்படும் கடிதத்தில் உள்ளது என்னுயை கையெழுத்து அல்ல. 21.07.2014ல் நான் ஒப்பந்தத்தில் கலந்து கொள்வதற்காக பேரூராட்சில் ரூ.1000/– தொகை கட்டியுள்ளேன் என்றால் நான் எந்த தொகையும் கட்டவில்லை.

நானும், நடராஜன் மகன் சதீஸ் என்பவரும் ஒப்பந்தத்தில் கலந்து கொண்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு நடந்த ஒப்பந்தத்தில் நான் ரூ.5,950/– தொகைக்கும் சதீஸ் என்பவர் ரூ.6175/– தொகையும் ஒப்பந்த புள்ளியாக குறிப்பிட்டு டென்டரில் கலந்து கொண்டோம் என்றால் நாங்கள் கலந்து கொள்ளவில்லை. என்னுடைய படிப்புச்சான்றிதழ் மற்றும் அனுபவ சான்றிதழ்களை மூடிய உறையில் இட்டு டென்டரில் கலந்து கொண்டேன் என்றால் இல்லை. குறைந்த

தொகைக்கு ஒப்பந்தம் கோரியதால் பேரூராட்சியால் தீர்மான எண்.378(23), தேதி 30.07.2014ன் படி ஒப்பந்தம் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் இல்லை. 01.08.2014 முதல் 31.07.2015 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணி செய்ய எனக்கு ஒப்பந்தம் பேரூராட்சியால் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. அந்த தீர்மானத்தின்அடிப்படையில் ஒப்பந்தப்படி மேற்குறிப்பிட்ட காலத்திற்கு என்னால் பராமரிப்பு பணி செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் டெண்டர் எதுவும் எடுக்கவில்லை. நான் டெண்டர் Agreement பேரூராட்சிக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் இல்லை.

31.07.2015ல் அடுத்த வருடத்திற்கான டெண்டர் தினசரி நாளிதழில் பேரூராட்சியால் கோரப்பட்டிருந்தது என்றால் இல்லை. சதீஸ் என்பவர் யார் என்றே எனக்கு தெரியாது. 2ம் வருடமும் நானும், சதீஸ் என்பவரும் 2 பேர் மட்டும் டெண்டரில் கலந்துகொண்டோம் என்றும் எங்களுக்கு ஒப்பந்தம் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் இல்லை. 2ம் வருடம் டெண்டரில் கலந்துகொள்வதற்கு 31.07.2015ல் பேரூராட்சிக்கு ரூ.1000/– செலுத்தியுள்ளேன் என்றால் இல்லை.

(எதிர்மனுதாரரின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem